17th August 1963]

ஆட்சிமொழி

*190 கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆட்சிமொழித் திட்டத்தைப் பற்றி மத்திய சர்க்காருக்குத் தமிழ்நாடு சர்க்கார் தெரிவித்த கருத்தின் விவரமென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: 1960-ல் தமிழ்நாடு சட்டப் பேரவையில் இரு சபைகளும் நிறைவேற்றிய தீர்மானங்களை அனுசரித்து, 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதிக்குப் பிறகும் ஆங்கிலம் யூனியன் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி இந்த அரசாங்கம் இந்திய அரசாங்கத்தை ஏற்கெனவே கேட்டுக் கொண்டுள்ளது.

In accordance with the resolutions passed by both the Houses of the Madras Legislature in 1960, this Government had already requested the Government of India to take steps for the continuance of English as a Union Official Language beyond 26th January 1965.

திரு. சோ. ஆறுமுகம்: அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலில், ஆங்கிலம் நீடித்து ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டதாகத் தெரிவித்தார்கள். அப்படியிருக்குமானால், மத்திய அரசாங்கம் ஆட்சி மொழித் திட்டத்தை மாற்றிவிட்டதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் மத்திய சர்க்கார் என்ன சட்டம் செய்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளவில்லை. வெளியே நடக்கும் தவறான பிரசாரத்தின் காரணமாக அவர் அவ்வாறு சொல்கிறார் என்று நினைக்கிறேன். நான் எதை இந்த மன்றத்தின் அங்கிகாரத்திற்கு வைத்து, இந்த மன்றத்தின் அங்கிகாரத்தைப் பெற்று, மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்தோம் என்று சொன்னேனோ, அதை ஏற்றுக்கொண்டு தான் அவர்கள் சட்டம் செய்திருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: 1965-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதிக்குப் பிறகும் ஆங்கிலம் நீடிக்கும் என்ற நிலைமை இருந்தாலும், 1975-ஆம் ஆண்டு இந்தியைப் புகுத்துவதற்கான வாய்ப்பு இப்பொழுது இருக்கிற சட்டத்திலே இருக்கிற காரணத்தால், இந்தியை நம்முடைய மாநில மக்கள் ஒத்துக்கொள்ளவில்லை, பலவந்தமாகத் திணிக்கும் முயற்சியை என்ன விலை கொடுத்தும் எதிர்த்தே தீருவார்கள் என்கிற கருத்தை மத்திய சர்க்காருக்கு நம்முடைய அரசாங்கம் எடுத்துரைத்ததா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் முன்னே விளக்கியிருக்கிறேன். இப்பொழுது பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் இந்தியைப் புகுத்துவது 1975-ம் ஆண்டிலிருந்து. அதுவும், இந்தியைப் புகுத்துவது என்பது இல்லை. இந்த மன்றம் நிறைவேற்றிய தீர்மானமும் இந்தியை அடியோடு புறக்கணிப்பது

என்பது இல்லை. இந்த மன்றத்தின் தீர்மானம் எல்லாக் கட்சியினரும் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆகும். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்போது 'டிவிஷன்' ஒன்றும் இல்லை. எல்லோரும் சேர்ந்துதான் வோட் செய்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானம் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பது. அதற்கு இந்தச் சட்டம் இடம் கொடுக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : 1975-ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியை முழுவதுமாகக் கொண்டுவருவதற்கு இப்பொழுதிருக்கிற மத்திய ஆட்சிமொழிச் சட்டத்தில் ஒரு வாய்ப்பு இருக்கிறதல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தச் சட்டத்திலே இல்லை. சென்ற முறை விவாதம் நடந்தபோது, அதை நான் தெளிவாக விளக்கியிருக்கிறேன்.

இந்தி தேர்வு (உயர்நிலைப் பள்ளிகள்)

*** 191 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் இந்தித் தேர்வு தேவையில்லை என்று அரசாங்கம் எடுத்த முடிவிற்கு மத்திய அரசாங்கம் கண்டனக் குறிப்பு ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, தேர்வுக்கு இந்தியில் வாங்கும் மார்க் பயன்படாது, ஆனாலும் மாடரேஷனுக்குப் பயன்படும் என்கிற 'திட்டத்தைக் கல்வி நிபுணர்கள்,' சரியான திட்டம் இல்லை' என்று கருத்துத் தெரிவித்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்களா ? அதன்மீது அரசாங்கம் ஏதாவது கருத்தை மாற்றிக்கொண்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் என்னிடம் தகவல் இல்லை. அப்படித் தெரிவித்ததாகத் தெரியவில்லை. கனம் அங்கத்தினர் அவர்களும் கல்வி நிபுணர்தான். பொதுவாக நிபுணர்கள் ஏகோபித்த அபிப்பிராயம் வைத்துக்கொள்வது இல்லை. அவர்களுக்குள் வெவ்வேறு அபிப்பிராயம் இருக்கலாம். பொதுவாக எல்லா அபிப்பிராயங்களையும் சேர்த்து ஆராய்ந்து அரசாங்கம் ஒரு முடிவு செய்கிறது. அந்த முடிவும் நிபுணர்களுடைய கருத்துக்கு ஏற்றதுதான்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தியில் தேர்வு வேண்டாம் என்று அரசாங்கம் முடிவு எடுத்தது உண்மையா ? அப்படி மாற்றிக் கொண்டதற்கு உண்மைக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்ற ஆண்டு, தேர்வு வேண்டாம் என்று முடிவு செய்தது. அதை மாற்றிக்கொள்ளவில்லை. நிரந்தரமாக என்ன செய்வது என்பது பின்னால் முடிவு செய்யப்பட்டது.